THE HON. THIRU S. J. SADIQ PASHA : The following is the list of new railway lines recommended to Government of India for being taken up on a priority basis during the successive plan periods :—

(i) Theni-Gudalur

(ii) Neiveli-Vridachalam-Salem

(iii) Salem-Bangalore

(iv) Chinna Salem—Chingleput.

(v) Tirunelveli-Cape Comorin

(vi) Salem-Tiruchirappalli

(vii) Manamadurai-Tuticorin

(viii) Thanjavur-Pattukottai

(ix) Kanchipuram-Vellore

(x) Satyamangalam-Chamrajanagar

(xi) Manamadurai-Virudhunagar

(xii) Ariyalur-Salem (via) Perambalur, Thuraiyur and Namakal.

(xiii) Karur-Dindigul (via) Gujiliamparai

Cauvery Irrigation System

* 612 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have received loan from the World Bank for the Modernisation of Cauvery Irrigation System in Thanjavur District?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

சோலையாறு அணைத்திட்டம்.

* 613 வினா.—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோலையாறு அணையைப் பார்க்க வெளியூரிலிருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

1972 மார்ச் 21]

திரு. இ. இராமசாமி : சோலையாறு அணையில் பயணிகளுக்காகப் படகுகள்விட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வால்பாறையில் இருந்து இந்த அணை கட்டப்பட்டுவிட்டதால் 22 மைல்கள் சுற்றி ஜனங்கள் வரவேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய நலனை உத்தேசித்தும் உடனடியாகப் படகுப்போக்கு வரத்தை ஆரம்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அணையைப் பார்க்க வெளியூரில் இருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசமுண்டா என்பது கேள்வி. நான் ஆம் என்றேன். ஜனங்களுடைய போக்குவரத்துக்குப் படகு விடுவதாகக் குறிப்பு இல்லை. அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளாததற்கு வருந்துகிறேன்.

வால்பாறையில் சுற்றுலா மையம்.

* 614 வினு—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறையை டூரிஸ்டு சென்டராக ஆக்குவது சம்பந்தமாக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. இ. இராமசாமி : வால்பாறை மலைப்பகுதி—அங்குள்ள இயற்கைக் காட்சியைக் காண பல ஊர்களில் இருந்து ஜனங்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை சுற்றுலாப் பகுதியாக கருதி விடுதி அமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். இனிமேலாவது அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியாக சுற்றுலா வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன, எந்த இடத்தில் சுற்றுலா விடுதி ஏற்படுத்தலாம் என்பது பற்றி அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். அந்த ஆராய்ச்சியில் வால்பாறை வந்தால் அதுவும் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மலைவாச ஸ்தலங்களில் உதகமண்டலம், கோடைக்கானல் இரண்டும்தான் டூரிஸ்ட் சென்டராக